செ.வெ.எண். 12/ 2021 நாள்: 05.03.2021

# திருப்பூர் மாவட்டம்

## தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்-2021 தொடர்பாக, மண்டல அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கவிஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், இன்று (05.03.2021) தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்-2021 தொடர்பாக, மண்டல அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கவிஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற உள்ள சட்டமன்றத் பொது தேர்தல் 2021 தொடர்பாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளும் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் மண்டலங்கள் உருவாக்கப்பட்டு மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| சட்டமன்ற தொகுதி | மண்டலங்கள் எண்ணிக்கை |
|---|---|
| 101 - தாராபுரம் (தனி) | 40 |
| 102 - காங்கயம் | 38 |
| 112 - அவினாசி(தனி) | 36 |
| 113 - திருப்பூர் வடக்கு | 40 |
| 114 - திருப்பூர் தெற்கு | 33 |
| 115 - பல்லடம் | 39 |
| 125-உடுமலைப்பேட்டை | 37 |
| 126 - மடத்துக்குளம் | 34 |
| **மொத்தம்** | **297** |

நியமனம் செய்யப்பட்டுள்ள மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி மண்டல அலுவலர்கள் ஆகியோருக்கு இன்று (05.03.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில்

பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பணியினை மேற்கொள்ளுவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு பேசினார்.

1. தங்கள் மண்டலத்தில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கு செல்லும் பல்வேறு வழிகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும், விரைந்து வாக்குச்சாவடிகளுக்குச் செல்லக்கூடிய வழிகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். வாக்குச் சாவடிக்குச் செல்லக்கூடிய வழியில் உள்ள சாலைகளின் நிலை, ஆறு, வாய்க்கால் மற்றும் பாலங்கள் உள்ளதா என்பது குறித்து தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு வாக்குச்சாவடியையும் தணிக்கை செய்து, வாக்குச்சாவடி அமைந்துள்ள இடத்தின் நிலை, வாக்குச்சாவடிக் கட்டிடம், தளவாடங்கள், அடிப்படை வசதிகள் (குடிநீர் வசதி, சாய்வுதள வசதி, மின் வசதி, கழிப்பறை வசதி, தொலைபேசி வசதி) மற்றும் பாதுகாப்பு தொடர்பான வசதிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.
3. பிரச்சினைக்குரிய மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எழக்கூடிய வாக்குச்சாவடிகள் இருப்பின், அது குறித்து ஆய்வு செய்து, முந்தைய காலத்தில் ஏதாவது சம்பவங்கள் நடந்துள்ளதா என்பது குறித்தும், ஜாதி, இன கலவரங்கள் நடந்துள்ளதா என்பது குறித்தும், தொடர்ச்சியாக சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் நடைபெற்றுள்ளதா என்பது குறித்தும் விபரங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

4 .மண்டல அலுவலர் மற்றும் உதவி மண்டல அலுவலர் ஆகியோர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை எவ்வாறு இயக்குவது என்பதை நன்கு தெரிந்து வைத்திருகக வேண்டும்

5.மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது தொடர்பான விழிப்புணர்வை தங்களது மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் இணைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். மேலும், இது குறித்து விரிவான விளம்பரத்தை அந்தப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

6.வாக்குச்சாவடிகளில் பணிபுரிகின்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கத்தக்க வகையில், வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முழுமையாக விபரங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

7. கொரோனா வைரஸ் பரவாமல் இருக்கும் பொருட்டு வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் அலுவலர்கள் பயன்படுத்தவும், வாக்களிக்க வரும் வாக்காளர்கள் பயன்படுத்தவும் வழங்கப்படும் பொருட்களை உரிய முறையில் பத்திரமாக பெற்று அவற்றை வாக்குச்சாவடிகளில் வழங்க வேண்டும். வழங்கப்படும் உபகரணங்களை வாக்குச்சாவடி அலுவலர்களும், வாக்காளர்களும் பயன்படுத்துகிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

## வாக்குப்பதியும் நாளுக்கு முந்தைய நாளில் செய்ய வேண்டியவை

1. தங்களது மண்டலத்திற்கு உட்பட்ட அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் உரிய அனைத்து படிவங்கள், கவர்கள், இதர பொருட்கள் சரியாக உள்ளதா என்பதைச் சரிபார்த்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

   1. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்
   2. பச்சை நிற முத்திரைத் தாள்கள்
   3. உலோக முத்திரை
   4. அழியா மைக்குப்பிகள்
   5. வாக்காளர் பட்டியல்கள்

   தேவையான அளவு உபரி படிவங்கள், கவர்கள், பொருட்கள் ஆகியவற்றை கைவசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

2. அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் சென்று உரிய பொருட்களை கொடுத்த பின்னர் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் ஆஜரில் உள்ளார்களா என்பதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அலுவலர்கள் பணிக்கு வராத நேர்வுகளில் மாற்று ஏற்பாடு உடனே செய்யப்பட வேண்டும். இதற்கு வசதியாக தேவையான அளவு ரிசர்வ் வாக்குப் பதிவு அலுவலர்களை நீங்கள் கைவசம் வைத்திருப்பது அவசியம். தாலூகா வட்டாரத் தலைமையிடத்திலிருந்து தொலைவில் உள்ள வாக்குச் சாவடிகள் அடங்கிய மண்டல அலுவலர்கள் கட்டாயம் ரிசர்வ் பணியாளர்களை தேவையான அளவு தங்களது வாகனத்தில் அழைத்துச் செல்ல வேண்டும்.

3. தங்கள் மண்டலத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் 200 மீட்டர் சுற்று எல்லைக்குள் எவ்வித சின்னங்கள், கட்சி தொடர்பான விளம்பரங்கள் இருக்கக்கூடாது என்பதும், வேட்பாளர்களின் தேர்தல் சாவடிகள் 200 மீட்டர் தொலைவுக்கு அப்பால் அமைக்கப்படல் வேண்டும். மேலும் வாக்குச்சாவடி அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் சின்னங்கள், கட்சி தொடர்பான விளம்பரங்கள் இருந்தால், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் துறையினருக்கு உடனே தகவல் தெரிவித்து, மேற்படி இனங்களை உடனடியாக அகற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாக்குச்சாவடி அமைந்துள்ள பகுதிகளில் தேர்தல் நடத்தை விதிகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்து, உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை இயக்குவதற்கு வாக்குச்சாவடி அலுவலர்கள் அனைவரும் தெரிந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எவ்வாறு இயக்குவது என்பதை அவர்களை செய்துகாட்டச் சொல்ல வேண்டும்.

## <u>வாக்குப்பதிவு நாளன்று செய்ய வேண்டியவை</u>

1. காலை 7.00 மணிக்கு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தி, அதனை உடனே தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தொலைபேசி மூலமாக தெரிவிக்க வேண்டும். மாதிரி வாக்குப்பதிவு தேர்தல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஏஜெண்ட்டுகளுக்கு செய்து காட்டப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. ஏதாவதொரு வாக்குச்சாவடியில் தாமதம் காணப்பட்டால் வாக்குச்சாவடி அலுவலருக்கு உரிய உதவிகள் செய்து, வாக்குப்பதிவினை தாமதம் இன்றி ஆரம்பித்து வைக்க ஆவண செய்ய வேண்டும்.ாக்குச்சாவடிகளில் இருப்பதற்கு தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் வாக்குச்சாவடிகளில் இருப்பார்களேயானால், அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

3. வாக்குப்பதிவு நாளன்று குறைந்தபட்சம் மூன்று தடவையாவது ஒவ்வொரு வாக்குச்சாவடியையும் பார்வையிட வேண்டும்.

4. இரண்டு மணிக்கொருமுறை பதிவான வாக்குகளின் சதவீதத்தை தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

## வாக்குப்பதிவு முடியப்பெற்ற பின்

1. வாக்குப்பதிவு முடியப்பெற்ற பின்பு பட்டியலில் கண்ட முறைப்படி தேர்தல் பொருட்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடமிருந்து விடுதலின்றிப் பெற்று, அவருக்கு ஒப்புதல் வழங்க வேண்டும்.

2. வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் நாட்குறிப்பு, வாக்குச்சீட்டு கணக்கு, பேப்பர் சீல் கணக்கு மற்றும் டிக்ளரேசன் ஆகியவற்றை தனியாகப் பெற வேண்டும்.

4. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் பிற பொருட்களை "Reception Centre"-ல் உரிய முறையில் ஒப்படைக்க வேண்டும்.

5. வாக்குச்சாவடி வாரியான ஓட்டு (ஆண் மற்றும் பெண்) விபரங்களையும், பிற புள்ளி விபரங்களையும் உரிய படிவத்தில் சேகரித்து அதனையும் ஒப்படைக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல்ஹமீது, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் வட்டாட்சியர் திரு.ச.முருகதாஸ், மற்றும் வங்கியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**